★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 10உ. திங்கள் (23—1—56) ★ ★ வெளியூர்: தை 11உ செவ்வாய் (24—1—56) [இதழ் 100

குன்றக்குடிகளார் 'பட்டினிப்போர்'

குடந்தை, ஜன. 23—

குன்றக்குடி ஆதீனத் தலைவரான குன்றக்குடி அடிகளார், தேவிகுளம் பீர்மேடு பிரச்சினையில் டில்லி சர்க்காரின் அநியாயத் தீர்ப்பை எதிர்த்து வரும் ஜனவரி 28-ந் தேதி முதல் 21 நாட்களுக்கு உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

'பண்டித நேருவின் அக்கிரமத் தீர்ப்பிற்கு எதிராக தமிழர் நடத்தும் போராட்டத்திற்கு நான் முழு ஆதரவு தரத் தயார்' என்று ம. பொ. சி. அவர்களுக்கு குன்றக்குடிகளார் தந்தி ஒன்றும் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

டெல்லி முடிவை மாற்ற வழி என்ன?

சட்டரீதியான வழிகள் உண்டு என்கிறார் இராதாகிருஷ்ணன்

ஜபல்பூர், ஜன. 22—

"இந்திய சர்க்கார், மாநிலப் புது அமைப்பு குறித்து நீண்ட காலம் விவாதித்துப் பலரின் யோசனைகளையும் கேட்டறிந்து முடிவுகளை மேற்கொண்டனர்; அவற்றில் சிலவற்றை நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், அவற்றை மாற்றியமைப்பதற்கு அமைதியான—சட்ட ரீதியான வழிகள் இருக்கின்றன; ஆனால், இந்தியாவில் கடந்த சில நாட்களில் நிகழ்ந்துள்ள சம்பவங்கள் நம் அனைவரையும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளன,"

என்று, குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

இராசேந்திரருக்கு எதிராகக் கறுப்புக் கொடியாம்!

திருவாங்கூர் ம. சோ. கட்சி முடிவு

திருவனந்தபுரம், ஜன. 22—

வரும் ஜனவரி 31-ந் தேதியன்று குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் நகருக்கு வரும்போது நகரில் உள்ள ம. சோ. கட்சியினர், தென்-திருவிதாங்கூரில் உள்ள நான்கு தமிழ் வட்டங்களைத் தமிழ் நாட்டுடன் இந்திய சர்க்கார் இணைப்பதற்கு எதிராகக் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று முடிவு செய்திருக்கின்றனராம்.

நகர ம. சோ. கட்சிக் கூட்டத்தில் மேற்சொன்னப்பட்ட இந்த முடிவின்போது, பட்டம் தாணுப் பிள்ளையும் உடன் இருந்தாராம்!

ஆந்திர மந்திரி சபை பதவி விலகல்?

தாடேப்பள்ளிகுடம், ஜன. 22—

"விசால ஆந்திரம் உடனடியாக அமைவது நிச்சயம் என்று நம்புகிறேன்; இந்திய சர்க்காரின் தீர்ப்பு மாறாக இருக்குமானால், ஆந்திர மந்திரி சபை பதவியிலிருந்து விலகத் தயாராக உள்ளது,"

என்று, ஆந்திர துணை முதன் மந்திரியான என். சஞ்சீவி ரெட்டி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம்.

பஞ்சாப் மாநில அமைப்பு

மேலிடத்தவர் பிடிவாதம்

பஞ்சாப் மாநிலத்தின் எதிர்கால உருவம் பற்றி அகாலிதளத்தவருடன் காங்கிரஸ் மேலிடத்தவர் நடத்திவரும் பேச்சுக்களில் இன்னும் முடிவு எதும் ஏற்படவில்லை என்று தெரிய வருகிறது.

இரண்டு நாள் பேச்சுக்களின் போதும், பஞ்சாபி மொழி வழங்கும் பகுதிகளை இணைத்து ஒரு மாநிலம் அமைக்க வேண்டும் என்ற தங்கள் கோரிக்கையை அகாலிதளத்தவர் வற்புறுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது; ஆனால், காங்கிரஸ் மேலிடத்தவர் பிடிவாதமாக அந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்க மறுத்துவருவதாயும், தொடர்ந்து செவ்வாயன்று பேச்சுக்கள் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

சென்னையில் தபால் நிலையத்தின் முன்பு ஆர்ப்பாட்டம்

இரண்டு மணி நேரம் அலுவல் நடைபெறவில்லை

சென்னை, ஜன. 23—

தமிழர்களின் உரிமையைப் பறிக்க இந்தியப் பேரரசு செய்த முடிவை எதிர்த்து, இன்று சென்னை மவுண்ட் ரோடில் உள்ள தபால் - தந்தி அலுவலகத்தின் முன்கூடி, தமிழரசுக் கழகத் தொண்டர்கள் சுமார் 25 பேர்கள் மறியல் செய்தனர்.

இன்று காலை 9 மணிக்குத் துவங்கிய மறியலைத் தோழர்கள் கே. விநாயகம் எம்.எல்.ஏ, சின்ன அண்ணாமலை ஆகியோர் கண்காணித்தனர்.

அலுவலகத்தின் கதவுகள் மூடப்பட்டு உள்ளும் புறமும் பலத்த போலீஸ் பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்தது.

மறியல் நடைபெற்ற இரண்டு மணி நேரமும், அலுவலகத்திற்கு எதிராக ஏராளமான மக்கள் கூடி நின்று ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர்.

மறியலில் ஈடுபட்ட தொண்டர்கள், டில்லி முடிவை எதிர்த்து உரிமைக் குரல் எழுப்பினர்.

அஞ்சல் அலுவல் எதும் நடைபெறவில்லை—கதவுகள் மூடப்பட்டு விட்டதால்!

அலுவலகம் வந்த அதிகாரிகள், ஆர்ப்பாட்டக்காரர்களினால் திரும்ப அனுப்பப்பட்டனர்.

அமைதியாகவே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின்போது எவரும் கைது செய்யப்படவில்லை போலீசாரும் அமைதியாகவே நடந்துகொண்டனர்.

மதுரையில்......

மதுரை நகரில் கடந்த சனி, ஞாயிறு இரு நாட்களிலும், தமிழரசுக் கழகத் தோழர்கள்—தபால் அலுவலகத்தின் முன் மறியல், இரயில்வே நிலையம் முதலிய ஆர்ப்பாட்டங்களில் முதலிய நடவடிக்கைகளுக்காக

15 பேர் கைது செய்யப்பட்டனர். தலைமைத் தபால் அலுவலகத்தின் முன்கூடி, சனிக்கிழமையன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாலையில் பசுமலைக்கும் — மதுரைக்குமிடையே திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வண்டி, அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தப்பட்டது; அப்போதும் சிலர் கைதாயினர். பின்னர் ஞாயிறன்றும் இரயில் நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்த பலர் கைதாகியிருக்கின்றனர்.

பக்தவத்சலத்தின் 'அடிமைப் புத்தி'!

டெல்லி முடிவை இறுதியானது என்று ஏற்க வேண்டுமாம்!

கிளர்ச்சி செய்வோர் பிற்போக்காளர்களாம்!

"மாற்றுக் கட்சியினர், மாநில புது அமைப்புக் குறித்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்; மாநிலங்களுக்குள் இம்மாதிரிப் பிரச்சினைகளில், பரஸ்பரம் சகிப்புத்தன்மை இருக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் கோரியது பூராவும் கிடைப்பது சாத்தியமானதல்ல; இந்த விவகாரத்தில் டில்லி சர்க்காரின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் சரியானதாகும்; பண்டித நேரு, பண்டித பந்த், தேபர், ஆசாத் இவர்களைவிட சிறந்த பாரபட்சமற்ற நீதிபதிகளை நாம் இந்தியாவில் காண முடியாது. நீதிமன்றத்துக்குச் சென்றாலும், ஒரு தீர்ப்புக் கூறப்பட்டால், அத்துடன் சர்ச்சை நின்றுவிட வேண்டியதுதான் சரியானதாகும்; அதற்குப் பிறகும் நீதிபதியைத் தூற்றுவது சரியல்ல; எனவே, இதுபற்றிய ஆர்ப்பாட்டங்கள் குறுகிய அரசியல் காரணங்களைக் கொண்டதாகத்தானிருக்க முடியும்,"

—என்று, மந்திரி பக்தவத்சலம், சேலத்தில் பத்திரிகையாளரிடம் கூறினாராம்.

நேற்று (22-1-55) சென்னையில் பேசிய அதே மந்திரி, தனக்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களைச் சுட்டிக்காட்டி, 'தேவிகுளம், பீர்மேடு விவகாரத்தில் டெல்லியின் முடிவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் எல்லாம் பிற்போக்காளர்கள்' என்று வசை பாடினாராம்!

இப்படி இவர் வசை பாடும்போது சுமார் 100 தமிழரசுக் கழகத் தோழர்கள் கறுப்புக்கொடிகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தி, 'பக்தவத்சலம் பதவியை விட்டு விலக வேண்டும்' என்று முழக்கமிட்டனர்.

மாநிலப் புது அமைப்பை ஒட்டி நாட்டில் எழுந்துள்ள நிலையை இங்குள்ள அரசியல் கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதாகவும் குற்றம் கூறினாராம், இந்த நியாயவான்!

தமிழர்களின் பெயரால் ஆர்ப்பாட்டம் நடத்துவது, தமிழர்களின் நற்பெயரைக் களங்கப்படுத்துவதாகும் என்றும் பேசினாராம், இந்தப் பரம யோக்கியர்!

இதர நேரத்தில், மக்களிடத்தில் செலவாக்குப் பெற முடியாத கட்சியினர், குழப்பம் மிகுந்த இந்த நேரத்தில் தங்கள் கட்சிகளை வளர்க்க முயற்சிப்பதாக, தேர்தலில் மக்களால் துரத்தப்பட்டு, பின்பு, மேலிடத்தயவில் மந்திரியான இந்த

பெரும்புளுகர் பிதற்றினாராம், வேறு ஒரு கூட்டத்தில்.

தேவிகுளம், பீர்மேடு தமிழ்நாட்டிற்கு வேண்டுமென்பதில் தான் யாருக்கும் சளைத்தவரல்ல என்றும், என்றாலும், மேலிடத்தின் தீர்ப்பை ஏற்பதுதான் நியாயமானது என்றும் சவடால் அடித்தாராம் இந்த உத்தமர்.

இவரது 'அடிமைப் புத்தி', தேவிகுளம், பீர்மேடு விவகாரத்திலேயே டெல்லியாரின் முடிவுகளையே இறுதி முடிவாகத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிற அளவுக்கு நெஞ்சுரத்தை அவருக்குத் தந்திருக்கிறது.

சகல கட்சிப் பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம்

சென்னை, ஜன 23—

நேற்று சென்னையில், தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டு கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் முதலிய இயக்கங்களின் தலைவர்களடங்கிய பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றபோது, வரும் 27-ந் தேதியன்று சகல கட்சி மாநாடு ஒன்று நடத்தி, அதில், டெல்லி முடிவை எதிர்த்துப் போராடுவதற்கான திட்டம் வகுப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆலோசனைக் கூட்டத்தில் தோழர்கள் ம. பொ. சிவஞானம், எஸ். பி. ஆதித்தன், ப. ஜீவானந்தம், எம். ஆர். வெங்கட்ராமன், பி. ஸ்ரீநிவாசராவ், நடராஜன், ஜோசப், இரா. நெடுஞ்செழியன், சி. என். அண்ணாதுரை ஆகியோர் கலந்துகொண்டனர். பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், 'தமிழக எல்லை மீட்புப் போராட்டத்திற்கு திராவிடர் கழகத்தின் ஆதரவு உண்டு' என்று, திருச்சியிலிருந்து அனுப்பியிருந்த கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

தலைமைக் கழகச் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—1—1956 ஞாயிறன்று காலை 10 மணிக்கு

சிதம்பரம் 'நாடார் சத்திரத்'தில்

நடைபெறும்

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் முக்கியப் பொருள்கள்:

(1) மாநில மாநாடு
(2) கழகச் சட்டதிட்டம் திருத்தம் செய்தல்
(3) கொள்கை விளக்க நூல் வெளியிடுதல்
(4) மாநிலப் புது அமைப்புப் பற்றி முடிவெடுத்தல்

—தி. மு. க. தலைமை நிலையம்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 23—1—'56 திங்கள்

பகை மூட்டியது எவர்?

மொழிவழி மாகாணக் கோரிக்கை, அன்றைய காங்கிரசின் கோட்பாடாகும். கோபுரத்தின் மீதிருந்து விண்ணதிர, அக்கோரிக்கையைக் காங்கிரஸ் மேலிடத்தார் கூவி வந்தனர்.

அதன் பலனாகத் தமிழரும், ஆந்திரரும், மலையாளிகளும், கன்னடரும் மொழிவழி மாகாண அமைப்பே சிறந்த ஏற்பாடு எனக் கருதத்தொடங்கினர். வாய்ப்பு நேரும் பொழுது அம்முறையில் தங்கள் தங்கள் மாகாணங்களைத் திருத்தி அமைத்துக்கொண்டு வாழும் விருப்பமும் மனப்போக்கும் அவர்களிடை வளர்ந்து வரலாயிற்று. அப்பொழுது, திராவிட இனத்தைச் சேர்ந்த இந்த நான்கு மொழிவழி மக்களும், தங்களுக்குள்ளாக துளி உட்பகைக்கும் இடமின்றி செயல்பட்டு வந்தனர்.

காலப் போக்கில்தான் எதிர்பார்க்காத நிலையில், இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் சுதந்திரம் காங்கிரஸ் மேலிடத்திடம் கைமாறிற்று. இந்தியத் துணைக் கண்டம் பிளவுபட்டுப் போனதால், உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய சிக்கலான பிரச்சினைகள் பல காங்கிரஸ் மேலிடத்தின் கவனத்தைக் கவர்ந்தன. அவைகளுக்குப் பரிகாரம் செய்யப்பட்ட பின்னர், தங்களால் நீண்ட காலமாக வற்புறுத்தப்பட்டுவந்த மொழி வழி மாகாண அமைப்பை நிறைவேற்றக் காங்கிரஸ் மேலிடம் முன்வந்திருக்க வேண்டும்; அதுவே முறையானதாகும்; அதைத்தான் அனைவரும் எதிர்பார்த்தனர்.

மொழிவழியில் மாகாணங்களைத் திருத்தி அமைப்பதைக் குறித்து காங்கிரஸ் மேலிடம் எண்ணவே இல்லை. முன்னாள் விடாது வலியுறுத்தி வந்த அப்பிரச்சினையை அறவே மறந்துவிட்டது போன்றே காங்கிரஸ் மேலிடம் நடந்துகொள்ளத் தொடங்கியது.

முன்னாள் கொடுத்த வாக்குறுதியான மொழிவழி அமைப்பை மேற்கொள்ள வேண்டுமென்று, பலப்பலர் காங்கிரஸ் மேலிடத்திற்கு நினைவுறுத்தத் தொடங்கினர். அப்பணியில் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு ஆந்திரர் முன்னணியில் நின்றனர்.

தங்களால் மறக்கப்பட்ட ஒன்றைத் தருணத்தில் நினைவுபடுத்தியதற்காக ஆந்திரர்களைப் பாராட்டி, மொழிவழி ஏற்பாட்டிற்கு உடனடியாக வழிவகை செய்வதற்குப் பதிலாகக் காங்கிரஸ் மேலிடம், அக்கோரிக்கையை மறுத்துப் பேசத் தொடங்கியது; அதனால் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்துண்டாகும் என்று புதிய போதனை புரியத் தொடங்கியது காங்கிரஸ் மேலிடம்.

காங்கிரஸ் மேலிடத்தின் புதிய கோலம் கண்டு, ஆந்திரர் அதிர்ச்சி அடைந்தனர்—தமிழர்களும் கண்விழித்துச் சிந்திக்கத் தொடங்கினர். காங்கிரஸ் மேலிடம் கூறிவிட்டதே என்பதற்காகக் கோரிக்கையைக் கைவிட்டு விடாமல், மொழிவழி மாகாண அமைப்பைத் தீவிரமாகக் கேட்கத் தொடங்கினர், ஆந்திரர்.

பிரச்சினையில் ஆந்திரர் தீவிரம் கூடினதுபோலவே, காங்கிரஸ் மேலிடத்தின் மறுப்பும் தீவிரமடைந்தது.

ஆந்திரர் கோரிக்கைக்கிருந்த மக்களின் பேராதரவு, ஆந்திரர் விருப்பத்திற்கு வேறு வழியற்ற நிலையில் காங்கிரஸ் மேலிடத்தைப் பணிய வைத்துவிட்டது.

இருந்தாலும், ஆந்திரர் விருப்பத்தை நிறைவேற்றாமல் காலந்தாழ்த்த, இறுதியான ஒரு முயற்சியையும் காங்கிரஸ் மேலிடம் கையாண்டது. இந்தியத் துணைக் கண்டத்தை மொழிவழியில் பிரிப்பதா கூடாதா என்பதை ஆராய்ந்தறிவது என்ற போர்வையில், தார் குழுவை நியமித்தது. அக்குழுவும் இத்துணைக்கண்டம் முழுவதும் சுற்றி, 'மொழிவழி மாகாண அமைப்பு இந்திய ஒற்றுமையை அழித்துவிடும்' என்ற முடிவைக் கூறிவிட்டது. அதுபற்றிய விரிவான ஆராய்ச்சி அவசியமற்றது.

தார் குழு முடிவு, மேலும் ஆந்திரருக்கு ஆத்திரத்தை மூட்டிவிட்டது. அதைத் தணிக்க படேல்—பட்டாபி—நேரு அறிக்கை வெளிவந்தது.

குழு, கருத்தறிதல், முடிவு அறிவித்தல் என்பதெல்லாம், தங்கள் கோரிக்கையைத் தட்டிக் கழிக்க காங்கிரஸ் மேலிடம் கையாண்டுவரும் கீழ்த்தரமான தந்திரமே என ஆந்திரர் அறிந்து கொண்டனர். மேலும் காலந்தாழ்த்தக் கூடாது என்ற திட சங்கல்பத்துடன் பொட்டி சீராமுலு உண்ணா நோன்பு மேற்கொண்டார். காங்கிரஸ் மேலிடத்தின் பிடிவாதத்திற்கு, அம்மாவீரனின் இன்னுயிர் பலியிடப்பட்டது. ஆந்திரர் கொதித்தெழுந்தனர்; விரும்பத் தகாத நாசங்கள் விளைவுகளாயின.

காங்கிரஸ் மேலிடம் கதிகலங்கிப் போயிற்று. புதிய ஆந்திரம் பிரசவமாயிற்று.

புதிய ஆந்திரத்தை உருவாக்கியது இந்தியப் பேரரசேயாகும். அப்பொறுப்பும் அதிகாரமும் இந்தியப் பேரரசிற்கே உண்டு என்பதைக் கூறத் தேவையில்லை.

ஆந்திரரும் — தமிழர்களும் பகைத்துக்கொண்டு மடிபிடி சண்டையில் இறங்கக் கூடாதே என்ற நல்லெண்ணம் இந்தியப் பேரரசிற்கு இயல்பாக இருந்தாகவேண்டும்.

அனைவரையும் ஆட்டிப் படைக்கும் இடத்தில் அது இருப்பதால், சண்டை சச்சரவு விடுவதற்கான காரணங்கள் அனைவருக்கிடையேயும் இருக்கக்கூடாது என்று பார்த்துக் கொள்ள வேண்டிய கடமையும் இந்தியப் பேரரசிற்கு உண்டு. அந்தக் கடமையை ஒழுங்காக—நேர்மையாக நிறைவேற்றி வைப்பதில் ஆந்திரர் - தமிழர் விஷயத்தில் இந்தியப் பேரரசு தவறு செய்துவிட்டது. அதன் விளைவு, ஆந்திரருக்கும் தமிழருக்கும் இடையில் பகையாக முடிந்திருக்கிறது.

ஆந்திரரும்—தமிழரும் பகைபட்டுக் கிடக்கட்டும் என்ற கெடு நினைப்பின்மீதுதான், அத்தகு ஏற்பாட்டை இந்தியப் பேரரசு செய்திருப்பதாக நாம் கருதுகிறோம். அக்கருத்துக்குத் தக்க ஆதாரம் இல்லாமல் இல்லை.

ஆந்திரம் மட்டுமல்ல, வேறு எந்த மாகாணங்களில் திருத்தம் செய்வதாக இருந்தாலும், அதற்கான அதிகாரம் பெற்றிருப்பது இந்தியப் பேரரசேயாகும். ஆந்திரத்தை உருவாக்கியதும் அதுதான். எனவே, எதிர்காலத்தில் ஆந்திரரும் - தமிழரும் பகைத்துக் கொள்ளாத வகையில் ஆந்திர மாகாணத்தை இந்தியப் பேரரசு உருவாக்கி இருக்க வேண்டும்.

கல்லெறிந்து விட்டு ஒரு விஷமி மறைந்துகொள்ளும் பொழுது, அக்கல்லெறிக்குப் பலியாகித் துடிக்கும் ஒருவன், எதிரில்வரும் அப்பாவியைக் கண்டதும் ஆத்திரம் கொள்ளாமலா இருப்பான்? கல்லடிபட்டவன் நிரபராதியைக் கோபித்துக் கொள்ளுகிறபொழுது, நிரபராதிக்கும் சீற்றம் பிறக்காமலா இருக்கும்?

கல்லெறிந்துவிட்டு ஒளிந்து கொண்டவன் நிலையில் இந்தியப் பேரரசும், கல்லடிபட்டவனும், அவன் கோபத்திற்காளாகி ஆத்திரமடைந்துள்ள நிரபராதி நிலையில் ஆந்திரரும்—தமிழரும் பகைத்துக் கொண்டுள்ளனர்.

மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் ஆந்திரம் உருவாக்கப்பட்டது. எனவே, பெரும் எண்ணிக்கையில் தமிழர் வாழும் பகுதிகளை, தாய்த் தமிழகமாக விளங்கும் சென்னையுடன் இணைத்திருக்க வேண்டியதுதான் இந்தியப் பேரரசின் நீங்காக் கடமையாகும். அவ்வாறு செய்யப்பட்டு இருக்குமானால், இன்று ஆந்திரர்மீது தமிழரும், தமிழர்மீது ஆந்திரரும் ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதற்கு வாய்ப்பே ஏற்பட்டிருக்காது; என்றும்போல் திராவிட இன மக்களாகவே அவ்விருவரும் அன்புடன் வாழ இடமிருந்திருக்கும்.

ஆனால், இந்தியப் பேரரசோ ஆந்திரரும்—தமிழரும் நட்புமுறையில் வாழ்வதற்கு அடிகோலாது, தமிழர் பெருந்தொகையினராக உள்ள சித்தூர் பகுதியை ஆந்திர மாகாணத்தில் பிணைத்துவிட்டு, ஆந்திரரும்—தமிழரும் எலியும் பூனையுமாக பகைத்துக்கொண்டு கிடக்க ஏற்பாடு செய்துவிட்டிருக்கிறது. இந்தியப் பேரரசு இதை வேண்டுமென்றே செய்திருக்கிறது என்று சொல்லாமல் வேறு எப்படி சொல்லுவது?

இது போன்றதுதான் பெல்லாரி விவகாரமும். ஆந்திரரும்—கன்னடரும் பகைபட்டுக் கிடக்கட்டும் என்ற தீயநோக்கத்துடன்தான் இந்தியப் பேரரசு நடந்துகொண்டு இருக்கிறது.

திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளை, சென்னைத் தமிழகத்துடன் இணைக்காது, சிலவற்றை திரு-கொச்சியுடன் இணைத்துவிட்டதின் மூலம், தமிழர்களையும் மலையாளிகளையும் சிண்டு முடிந்துவிட்டிருக்கிறது இந்தியப் பேரரசு. அதன் பலனாக, தமிழர் நிலங்களை மலையாளிகள் கவர்ந்துகொண்டதாக, மலையாளிகள் மீது நமது கோபப் பார்வை பாய்ந்து செல்லுகிறது.

இத்தகுச் சூழ்நிலையை, பகைமூட்டும் பணியை உருவாக்கிவிட்ட இந்தியப் பேரரசு, நமது போக்குக் கண்டு பூரிப்படைகிறது. தனது உள்ளெண்ணம் சீராகச் செயல்படுவதாக அது இறும்பூதெய்துகிறது.

தி-கொ. தமிழர் நிலங்களை, மலையாளிகளாக நம்மிடம் இருந்து கவர்ந்துகொள்ளவில்லை. கடைத் தேங்காயைத் திருடி, வழிப் பிள்ளையாருக்கு உடைத்தவன் கதைபோல, நமது தமிழர் இடங்களை மலையாளிகளுக்குக் காணிக்கையாக்கி இருக்கிறது இந்தியப் பேரரசு. எனவே, நமது எதிர்ப்பின் இலக்கு இந்தியப் பேரரசேயாகும். அதை நோக்கியே தமிழர்களின் ஒருமுகமானத் தாக்குதல் இருந்தாக வேண்டும்.

தமிழர்களின் ஒன்றுபட்ட அறப்போர், மலையாளிகளுக்கும் - நமக்கும், ஆந்திரர்களுக்கும் - நமக்கும் பகைமூட்டிவிட்டிருக்கிற இந்தியப் பேரரசின் போக்கை எதிர்ப்பதாகவே இருக்க வேண்டும். இவ்வாறின்றி, நமது எதிர்ப்பு வேறு திசை நோக்குமானால், தான் செய்த சூழ்ச்சி வெற்றிகரமாக நிறைவேறுவது கண்டு இந்தியப் பேரரசு கொண்டாட்டம் போடும். அதற்கு நாம், பறிக்கப்பட்ட நமது உரிமையைப் பெறத் தொடங்க இருக்கும் அறப்போரில் இடமளித்துவிடக் கூடாது. நமது அறப்போரில் ஆர்வமும், அரசியல் யூகமும் சரிபங்காக இருக்க நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பகையூட்டியது எவர் என்ற வினவை நாம் ஒவ்வொருவரும், ஒருமுறைக்குப் பன்முறை கேட்டுக்கொள்ள வேண்டும். அதற்குக் கிடைக்கும் விடையில்தான், நமது எதிர்ப்பு சென்று தாக்கவேண்டிய இடம் இலைமறை காயாக இருக்கிறது.

பீகாரில் கனரக மின்சாரக் கருவி உற்பத்திச்சாலை

ரூ. 75 கோடி மூலதனத்தில் துவங்கப்படும்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடு

இந்தியப் பேரரசு இறுதியாக முடிவுகட்டிவிட்டதாம்

மின்சார சாதனங்களை உருவாக்குவதற்குக் கனரக மின்சாரக் கருவி உற்பத்திச்சாலை ஒன்றை பீகார் மாகாணத்தில் நிறுவ இந்தியப் பேரரசு இறுதியாக முடிவு செய்திருக்கிறது. இந்த ஏற்பாடு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படும் எனத் தெரிய வருகிறது. இதற்காகும் மூலதனம் ரூ. 75 கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஜிலையா, புகாரோ, ஜாம்ஷெட்பூர் அருகிலிருக்கும் ஆதித்தியபூர் ஆகிய மூன்று இடங்களை, மேற்படி தொழிற்சாலையைத் துவக்குவதற்கு ஏற்ற இடமென பீகார் அரசாங்கம் யோசனை கூறியிருக்கிறது.

தெற்கு பீகாரில் இருக்கும் இப்பகுதிகளை பிரிட்டிஷ் நிபுணர்கள் நேரில் பார்த்து ஆராய்ந்து வருகின்றனர்

சென்னை அரசாங்கத்தின் கோரிக்கை நிறைவேறுமா?

ஆவடியில் கனரக மின்சார இயந்திரத் தொழிற்சாலை நிறுவப்படுமா?

பிரிட்டிஷ் தொழில் நுட்பக் குழுவிடம் கோரிக்கை

சென்னை, ஜன 20—

ஐம்பது கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கனரக (பெரிய) மின்சாரக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவுவதற்கான சரியான இடத்தைக் கண்டறிய நாடு முழுவதிலும் சுற்றுப் பயணம் செய்து வருகிற பிரிட்டிஷ் தொழில் நுட்ப ஆலோசகர்களடங்கிய நிபுணர் குழு, சென்னையிலிருந்து 15 மைல் தொலைவிலுள்ள ஆவடியைப் பார்வையிட்டனர். இந்த இடத்தில் அத்தொழிற்சாலையை நிறுவ முடியுமா என்பதைப் பார்க்கவே இவர்கள் சென்றிருந்தனர்.

சென்னை முதலமைச்சர் காமராசர், மற்றமுள்ள அதிகாரிகளையும் இந்த நிபுணர் குழு சந்தித்துப் பேசியது. அப்போது இத்தொழிற்சாலையை சென்னையில் நிறுவ வேண்டுமென்ற சென்னையின் கோரிக்கை அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. இத்தொழிற்சாலையை நிறுவுவதற்குத் தேவையான மூவாயிரம் ஏக்கர் நிலமும் ஆவடியில் எளிதாகக் கிடைக்குமென்றும், ஆகவே, இத்தொழிற்சாலையை ஏற்படுத்த ஆவடியே சரியான இடமாகுமென்றும் நிபுணர் குழுவிடம் சென்னை அரசாங்கம் தெரிவித்தது. ஏற்கனவே ஐதராபாத், பம்பாய் ஆகிய இடங்களை இக்குழுவினர் பார்வையிட்டிருக்கின்றனர்.

பெரிய மின்சாரக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிற ஆட்களுக்குப் பயிற்சியளிக்க தேவையான கருவிகள், சாதனங்கள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி அறிய நாட்டிலுள்ள பல்வேறு தொழில் நுணுக்க நிலையங்களையும் மற்றொரு நிபுணர் குழுவினர் பார்வையிட்டு வருகின்றனர்

'தென்னாடு தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிறது'

இந்திய சர்க்கார் உயர்தர அதிகாரி கருத்து

மதுரை, ஜன 20—

"இந்தியாவின் இதர பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தென்னாடு மிகவும் பின்னணியில் இருந்துவருகிறது; தொழில் துறையில் அபிவிருத்தியடையாமல் இருந்துவருகிறது.

"ஆண்டுதோறும் ஏராளமானவர்கள் கல்விபெற்று வெளிவருகிறார்கள்; சிலருக்குத்தான் சர்க்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் நாட்டுக்கு அநீதி

18—1—56 'நவ இந்தியா' இதழில், 'தமிழ் நாட்டுக்கு அநீதி' என்ற தலைப்பில் வெளியிடப் பெற்றுள்ள தலையங்கத்தின் சில முக்கியமான பகுதிகள் இங்கு தரப்படுகின்றன :—

"ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் அறிக்கைமீது சர்க்கார் செய்திருக்கும் முடிவு, பம்பாய் ராஜ்யத்தில் மட்டுமே அதிருப்தி விளைவித்திருக்கிறது என்பதில்லை; தமிழ் நாட்டு மக்களுக்கும் அது மிகுந்த ஏமாற்றமளித்திருக்கிறது. சென்னை ராஜ்யத்துக்கு சர்க்கார் நியாயம் வழங்கத் தவறிவிட்டார்கள் என்றுதான் இம்முடிவைப் பற்றிக் குறிப்பிடவேண்டும்

"தென்திருவாங்கூரிலுள்ள தமிழ்த் தாலுகாக்களையும், சித்தூர், பாலக்காடு தாலுகாக்களிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களையும் சென்னை ராஜ்யத்துடன் சேர்க்க வேண்டுமென்று தமிழர்கள் நீண்டகாலமாக வற்புறுத்தி வருகின்றனர். ஆனால் தென்திருவாங்கூரிலுள்ள 5 தாலுகாக்களைமட்டுமே சென்னை ராஜ்யத்துடன் சேர்க்கலாமென்று கமிஷன் சிபாரிசு செய்திருந்தது.

"இதர பிரதேசங்களை சேர்க்கக்கூடாது என்பதற்குக் கமிஷன் கூறிய காரணம் வெறும் சொண்டிச் சமாதானம்தான் ஆகையால், அந்த அநீதியான சிபாரிசுகளைத் தமிழர்கள் ஒப்புக்கொள்ளாததில் ஆச்சரியமில்லை. என்றாலும் அவர்கள் பம்பாய் ராஜ்யத்தினரைப் போல பலாத்காரங்கள் மூலம் தமது ஆட்சேபணையைத் தெரிவிக்கவில்லை அதற்குப் பதில் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் தீர்மானங்கள்வாயிலாகவும், சட்டசபை மூலமும் தமது விருப்பத்தை வெளியிட்டனர் பிறகு டில்லி சென்றும் தமது கோரிக்கையிலுள்ள நியாயத்தை எடுத்துரைத்திருக்கிறார்கள் அவர்களது வாதங்களைக் கேட்ட பின்னர், 'சில எல்லை மாறுதல்களுக்குட்பட்டு' ஐக்கிய கேரளத்தையும், சென்னை ராஜ்யத்தையும் உருவாக்குவதென்று சர்க்காரிலுள்ள மேலிடத் தலைவர்கள் முடிவு செய்தனர் அதன்மூலம் அவர்கள் தமிழர்களுக்கு நியாயம் வழங்குவார்கள் என்றே எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், இறுதியில் கிடைத்தது நியாயமல்ல — அநீதி! புனரமைப்புக் கமிஷன் சிபாரிசு செய்திருந்த ஐந்து தாலுகாக்களிலும் ஒரு பகுதியைக் கேரளத்திற்கே விட்டுவிட்டு மீதி சுமார் நாலரை தாலுகாக்களை மட்டுமே சென்னை ராஜ்யத்துடன் சேர்ப்பதென சர்க்கார் இப்போது முடிவு செய்திருக்கிறார்கள் ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டக் கதையாக இருக்கிறது, இது!

"தமிழ்த் தாலுகாக்கள் எல்லாவற்றையும் சென்னை ராஜ்யத்துடன் சேர்க்க முடியாததற்கு சர்க்கார், ஒருவிதமான சமாதானமும் சொல்லக்காணோம் பம்பாய் நகரைத் தனி ராஜ்யமாக்குவதற்கு அவர்கள் காரணம் சொல்லாதது போலவே, இதிலேயும் மௌனம் சாதிக்கின்றனர் அத்துடன் எல்லை நிர்ணயத்துக்கு ஒரு குறிப்பிட்ட வரைமுறையை அடிப்படையாகக் கொண்டதாகவும் தெரியவில்லை

"பம்பாய்—கர்நாடக எல்லைப் பிரிவினைக்குத் தாலுகாக்களை அடிப்படையாகக் கொண்டவர்கள், சென்னை—கேரள எல்லைப் பிரிவினையிலும் அதே கொள்கையை அனுஷ்டித்திருக்க வேண்டும் ஆனால் அவர்கள் செங்கோட்டை தாலுகாவை இரண்டு துண்டாக்கி, மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கிலுள்ள பாகத்தைக் கேரளத்துக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இது என்ன நியாயம் என்பதுதான் தெரியவில்லை.

"பீகார்—மேற்கு வங்க எல்லைப் புனரமைப்பில் அவர்கள் இன்னும் அதிக சலுகைகள் காட்டியிருக்கிறார்கள். அங்கு ஏறக்குறைய பிர்க்கா அடிப்படையில் எல்லை புனரமைப்பு செய்யப்பட்டிருக்கிறது! இவற்றிலிருந்து வெளியாவது இதுதான் :—

"பிரதேசத் தலைவர்களின் செல்வாக்குப் பிரயோகத்துக்குத் தகுந்தவாறெல்லாம் மத்திய சர்க்கார் கூட்டியும் குறைத்தும் சலுகை காட்டியிருக்கிறார்கள் என்றுதான் நாம் யூகிக்க வேண்டியிருக்கிறது.

"மொழிவாரியாக இராஜ்யங்களைத் திருத்தி அமைப்பதைக் கொள்கையளவில் ஒப்புக்கொண்ட பிறகு, அதைக் கிரமமாகப் பூர்த்தி செய்வதுதான் முறை. அதற்குக் கமிஷன் இடையூறயுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு சர்க்கார் முயற்சித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல், அதிக நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்பட்ட இடங்களில் மட்டும் வளைந்து கொடுத்துவிட்டு, இதர இடங்களில் கமிஷன் அறிக்கையை அப்படியே குற்றங் குறைகளுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கூறுவது எவ்விதத்திலும் பொருத்தமானதல்ல; அதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

"சென்னை இராஜ்யத்துடன் இணையவிருக்கும் நாலரை தாலுகாக்களை மீண்டும் கேட்க விரும்புபவர்கள், பிரிவினைக்கு ஒப்புக்கொள்வார்களா என்ன? செங்கோட்டைத் தாலுகாவிலுள்ள மலையான கானல் பிரதேசம் தமிழ் நிர்வாகத்தில் இருக்கக்கூடாது என்று அதை அவர்கள் பிரித்துக் கொண்டு செல்கையில், தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் முதலான இடங்களிலுள்ள தமிழர்கள் மட்டும் அவர்களுடைய நிர்வாகத்தில் எவ்வாறு இருக்க முடியும்? பரம்பிக்குள அணைக்கட்டுக்கு அவர்களது எல்லைக்குள் இடமளிக்க மறுப்பவர்கள், நாளை அங்குள்ள தமிழர் நலனையும் புறக்கணிக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

"அன்னியர் ஆட்சிக்காலத்தில் தான் இங்கு போராடிப் போராடி உரிமைகள் பெறவேண்டி இருந்தது.

"இப்போது சொந்த ஆட்சியிலும் கூட உரிமைகளுக்காகப் போராட வேண்டியிருக்கிறதே என்று தமிழர்கள் எண்ணி மனம்நோவதற்கு சர்க்கார் இடமளிக்கமாட்டார்கள் என்றே நம்புகிறோம்"

★

***

தலைமைக் கழகம் : அறிக்கை—2/56

கழகம் நிறுவுவோர் கவனிக்க

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரால் முக்கியக் கிளைகளும், மாணவக் கிளைகளும் மட்டும்தான் ஆங்காங்கு அமையலாமே ஒழிய, வேறு எந்தப் பெயராலும் அமைத்தல் கூடாது.

இளைஞர் திராவிட முன்னேற்றக் கழகம் என்றும், திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம் என்றும் சிற்சில இடங்களில் சிலர் அமைத்திருப்பதாகத் தெரியவருகிறது. அத்தகைய அமைப்புகள் நமக்கு உடன்பாடுடையன அல்ல. இளைஞர் பெயரால் தி. மு. க. அமைப்புக்கு அவசியமில்லை.

கழகத் தோழர்களும், கழகச் சொற்பொழிவாளர்களும் அத்தகைய அமைப்புகளுக்கு ஆதரவு தரவேண்டாம்.

'அறிவகம்'
சென்னை - 13
23—1—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

***

பொருத்தமற்ற அரசாங்க முடிவுகள்

19—1—56 'தமிழ் நாடு' இதழில், 'பொருத்தமற்ற அரசாங்க முடிவுகள்' என்ற தலைப்பில் வெளியிடப் பெற்றுள்ள தலையங்கத்தின் சில முக்கியமான பகுதிகள் இங்கு தரப்படுகிறது;—

"மாகாணப் புனரமைப்புக் குழுவின் அறிக்கையைக் குறித்து இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ள முடிவுகள் பொருத்தமற்றத் தன்மையில் அமைந்திருப்பது வருந்தத் தக்கதாகும்; அவை பொறுப்பற்ற முறையில் வகுக்கப்பட்டுள்ளன என்று கூறுதல் மிகையாகாது.

"கேரளத்திலுள்ள தமிழ்த் தாலுகாக்கள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்படவேண்டுமென்பது அப்பகுதிகளிலுள்ள மக்கள் கோரிக்கையாகும். இக்கோரிக்கையைப் பெருவாரியாக ஆதரித்து, தங்களுடைய கருத்தைப் பொதுத் தேர்தல்களின் போது அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்; திருவாங்கூரிலுள்ள தமிழ் வாழ் பகுதிகளான ஒன்பது தாலுகாக்களும் தமிழ் நாட்டுடன் இணையவேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்துவதற்காக, அரசினர் கட்சியாகிய காங்கிரசிற்குள் ஒரு பிரிவினை அமைப்பை அவர்கள் ஏற்படுத்தினார்கள். திருவாங்கூர்—கொச்சி தமிழ் நாட்டு காங்கிரசுக் குழு என்ற அவ்வமைப்பின் ஆதரவின் கீழ் நிறுத்தப்பட்ட உறுப்பினர்கள், தமக்கெதிராக நிறுத்தப்பட்ட காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களைத் தோற்கடித்து, இணைப்புக் கொள்கைக்கு மக்களிடையேயுள்ள பெருமிதமான ஆதரவை விளக்கமாகப் புலப்படுத்தினார்கள்.

"அரசாங்கக் கட்சி, தமிழர்களுடைய கோரிக்கையை மறுக்கும் தன்மையில் இயங்கத் தொடங்கிற்று. இதைக் கண்டு வெகுண்ட தமிழர்களுடைய காங்கிரசுக் குழு, அமைச்சரவைக்கு மேலும் ஆதரவளிக்கமறுத்து, தம்முடைய பிரதிநிதியை, அமைச்சர் பணியைத் துறக்குமாறு கட்டளையிட்டது.

"தமிழ் மக்களுடைய ஆதரவை இழந்த அமைச்சரவை வீழ்ந்து, சட்டசபை கலையப் பெற்று, மறுமுறையும் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலிலும் காங்கிரசுத் தலைவர்கள் மீண்டும் பெருவாரியான வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்கள்.

"அகத்தீசுவரம், தோவாளை, கல்குளம், விளவன்கோடு, செங்கோட்டை ஆகிய தாலுகாக்கள் தமிழ் நாட்டோடு சேர்க்கப்பட வேண்டும் என்ற அக்குழு ஆலோசனை கூறியிருக்கிறது.

"தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டிருப்பது குறித்துத், தமிழ் மக்களிடையே பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டிருப்பதோடு கூட, அம்முடிவை நிராகரிக்க வேண்டுமென்ற தீவிர உணர்ச்சியும் தோன்றியிருக்கிறது. தமிழ் நாடெங்கும் கண்டன ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நிகழ்ந்து வருகின்றன; இதற்கு இந்தியப் பேரரசினரே பொறுப்பாளராவர்.

"மீண்டும் ஒரு மாபெரும் அறப்போர் துவங்குவதற்கு இவை முன்னெச்சரிக்கை என்று கருதுகிறோம். மக்களுடைய கருத்திற்கு மாறுபட்ட முடிவை அரசினர் செயற்படுத்த முயலும்போதெல்லாம் அறப்போர் தொடங்குவது இயல்பு. தமிழர்களுடைய கலை, பண்பாடு ஆகிய சிறப்புரிமைகளைப் பாதுகாப்பதற்கு அறப்போர் தவிர வேறு வழியில்லை என்ற தன்மையில் இந்திய அரசாங்கம் முடிவு கூறியிருக்கிறது.

"கேரளத் தமிழ்ப் பகுதிகள் அனைத்தும் உடனடியாகத் தமிழ் நாட்டுடன்தான் சேரவேண்டும் என்பது மற்றொரு கருத்து. இதையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்; இவ்விருப்பங்கட்குப் புறம்பான முடிவை அவர்கள் எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்."

களிப்பும் கவலையும்

18—1—56 'தினமலர்' இதழில், 'களிப்பும் கவலையும்' என்ற தலைப்பில் வெளியிடப் பெற்றுள்ள தலையங்கத்தின் சில முக்கியமான பகுதிகள் இங்கு தரப்படுகின்றன :—

"கேரளத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் மேலிடத்தார் கமிஷன் சிபாரிசுகளையே அந்தரங்க இலட்சியமாகக் கொண்டிருந்திருக்கின்றனர். வெறும் வெளிப்பூச்சுக்காக 'உயர்தரக் கமிட்டி' என்றும், 'விசாரணை' என்றும் கூறி, தமிழர்களுக்கு வீண் நம்பிக்கைக் கொடுத்து ஏமாற்றிவிருக்கின்றனர் என்பதைக் கூறாமலிருக்க முடியாது.

"தாலுகா யூனிட்டிற்குக் குறைந்த ரீதியில் எல்லைகளைத் திருத்தி அமைக்கப் போவதில்லை என்ற கொள்கை செங்கோட்டை விஷயத்தில் பொய்யாக்கப்பட்டதற்குரிய காரணம் என்னவாக இருக்கும் என்பது தெரியவில்லை கேரளத்தவர்களின் அமிதமான செல்வாக்கு, கொள்கைகளைக் கூடத் திருத்தக்கூடிய அளவு சக்தி வாய்ந்ததாக உள்ளது என்று கூட ஒரு தாரணை ஏற்படலாம்.

"தமிழ் ராஜ்யப் பகுதிகளின் உரிமைகளைப்பெற சென்னையிலுள்ள தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களும் மந்திரிகளும் திடமாக வாதாடவில்லையோ என்று கூடச் சந்தேகிக்க மத்திய சர்க்கார் சந்தர்ப்பம் தந்துவிட்டனர். மத்திய சர்க்காரின் செல்வாக்கிற்கு ஓரளவுப் பங்கம் ஏற்பட நியாயம் இருக்கிறது.

"தேவிகுளம், பீர்மேடு மீது மத்திய சர்க்கார் அளித்திருக்கும் தீர்ப்பு ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு விபரீதமாகும்.

"செங்கோட்டைத் தாலுகாவைப் பகுதிவாரியாக நிர்ணயிக்கத் தோன்றிய சர்க்காருக்கு, தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களில் அதுதோற்றம் மாறவேண்டிய காரணம் என்ன? அதுபோல நெய்யாற்றங்கரை தாலுகாவிலுள்ள சில பகுதிகள் சென்னையோடு இணைய வேண்டுமென்ற உரிமையை சர்க்கார் உண்மையிலேயே மறந்தார்களா? அல்லது அவர்களிடம் சென்னையின் சார்பில் விளக்கமாக எடுத்துக்காட்டப்படவில்லையா என்பது தெரியவில்லை.

"தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் தாலுகா தமிழர்களுக்கு, சர்க்கார் தீர்ப்பு பெரும் அதிர்ச்சியைக் கொடுப்பதாக இருக்கும். தமிழர்கள் என்றும் ஐக்கியமாக இருந்தால் நிச்சயமாகும் இலட்சியத்தை அடைந்துவிடலாம். உரிமைகளை என்றும் மறக்க முடியாது. ஒரு நாள் அல்லது மற்றொரு நாள் நியாயத்திற்கும் உரிமைக்கும் பணிந்துதானாகவேண்டும். அந்த நாள் எந்நாள் என்பதை எதிர்பார்த்திருப்போமாக."

***

கிளைக் கழக நிர்வாகிகளுக்கு
விளக்கம்

★

பொதுச்செயலாளரின் அறிக்கைக்கேற்ப, சேர்க்கப்பட்டு வரும் புதிய உறுப்பினர்களைக் கொண்டு கழகங்களின் தேர்தலை நடத்துவதோ, அல்லது நிர்வாகிகளை மாற்றுவதோ கூடாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். புதியதாகச் சேர்க்கப்பட்டு வருபவர்களுக்கு, உறுப்பினர்களுக்கான உரிமை பெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்; அதுவரையில், பழைய உறுப்பினர்களே உரிமையுடையவர்களாவர் என்பதை இதன்வாயிலாகக் கிளைக் கழக நிர்வாகிகளுக்கும், கழக உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

'அறிவகம்',
சென்னை-13
19—1—56

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்

***

நெல்லை நகர தி. மு. க. தோழர்கட்கு

★

"நெல்லையில் தி. மு. கழக உறுப்பினர்களாகச் சேரும் தோழர்கள், மாவட்டக் கழக உறுப்பினர் தோழர் எஸ். ஆர். கந்தசாமி அவர்களிடம் பதிவு செய்துகொள்ளவேண்டும்; உறுப்பினர்கள் சேர்ப்பதற்கும், கழக வேலைகளைச் செய்வதற்கும், தோழர் எஸ். ஆர். கந்தசாமி அவர்கள், 8—1—56-ல் நெல்லையில் நடைபெற்றக் கூட்டத்தின் போது நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,"

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அறிவிக்கிறார்.

சேலம் மாவட்ட தி. மு. கழக செயலாளர்கட்கு

"உறுப்பினர் பதிவு விண்ணப்பத் தாள்களை இன்னும் சில கிளைகள் பெற்றுக்கொள்ளவில்லை. உறுப்பினர் சேர்க்கும் கடைசி நாள் 31-1-56-தான். ஆதலால், உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் பெறாத கிளைகள், மாவட்டக் கிளைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"தாள்களைப் பெற்றுக் கொண்ட கிளைகள், வேறு கிளைகளுக்கோ, கழகம் ஆரம்பிக்கவிருக்கும் பொறுப்பாளர்களுக்கோ அத்தாள்களைக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். எல்லோரும் நேரடியாக மாவட்டக் கிளைகளிடமிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும்.

"உறுப்பினர்கள் சேர்ந்த விபரத்தை விண்ணப்பத் தாள்களில் உள்ளபடி மாவட்டக் கிளைக்கு ஒரு 'நகல்' அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, சேலம் மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் பி. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

சேலத்தில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்

சகல கட்சியினரும் திரண்டனர்

சேலம், ஜன. 20—

தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டையில் ஒரு பகுதி ஆகியவை திரு-கொச்சியுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற நேரு பண்டிதரின் அறிக்கையைக் கண்டிக்கும் முறையில், நேற்று மாலை, சேலத்தில், தி. க., தி. மு. க, தமிழரசுக் கழகம், ம. சோ. கட்சி, கம்யூனிஸ்டு கட்சி, லாரி சொந்தக்காரர்கள் சங்கத்தினர் ஆகியோர் அடங்கிய மாபெரும் கண்டன ஊர்வலம், செவ்வாய்ப்பேட்டை ராஜேந்திரா சத்திரத்திலிருந்து புறப்பட்டு நகரின் பல பகுதிகளில் ஊர்வலம் வந்தது. 'தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கே,' 'நேருவின் தீர்ப்பு அநீதியானது,' 'சென்னை மந்திரிகளே இராஜிநாமா செய்யுங்கள்' என்ற ஒலி முழக்கங்களுடன் ஊர்வலத்தினர் வி. மார்க்கெட்டை அடைந்தனர்.

பிறகு தோழர் வடிவேலு (ம. சோ.) தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம் துவக்கப்பட்டது. தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன் (தி. மு. க.), கே. எல். ரங்கசாமி (ம. சோ.), கே. வி. இராமசாமி எம்.எல்.ஏ. (கம்), கே. இராசாராம் (தி. க), ம. கோபால் (த. க), கே. கே. இராமதாஸ், ஜீ. சாமுவேல் (கம்.), மாணவத் தோழர்கள் வெங்கட்ராமன், கிள்ளிவளவன் ஆகியோர் திரு-தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்துப் பேசினர். இறுதியில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. அன்று நகரில் எல்லாக் கடைகளும் மூடப்பட்டன. (ந. கி.)

போடிநாயக்கனூர்:

கண்டன ஊர்வலம்

தேவிகுளம், பீர்மேடு பகுதிகளையும் செங்கோட்டையின் ஒரு பகுதியையும் மலையாளத்துடன் சேர்க்க வேண்டுமென்று நேரு வழங்கிய அநீதியான தீர்ப்பைக் கண்டிக்கும் முறையில், போடிநாயக்கனூர் நகர தி. மு. கழகத்தினரால் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டன. 600-க்கு மேற்பட்ட பள்ளி மாணவர்கள், தி. மு. கழகத் தோழர்கள் ஆகியோர் கறுப்புக் கொடிகளுடன் நகரின் எல்லாப் பகுதிகளிலும் ஊர்வலமாகச் சென்றனர்.

நேருவின் அக்கிரமமான தீர்ப்பைக் கண்டித்தும், காமராசர் அமைச்சரவை உட்பட சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும்உடனே பதவியிலிருந்து விலக வேண்டு மென்றும் ஊர்வலத்தினர் முழக்கமிட்டனர். (ந. கி)

திருப்பூர்:

திருப்பூர், ஜன. 20—

இன்று திருப்பூர் நஞ்சப்பா உயர்நிலைப் பள்ளி, கே. எஸ். வி. உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாமல், ஒன்று திரண்டு ஊர்வலமாகச் சென்றனர். மறியலையும், ஊர்வலத்தையும் திருப்பூர் திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தினர் நடத்தி வைத்தனர். ஒருநாள் முன்பாகவே நகர தி.மு.க., தி. மா. மு. கழகத்தினர் பொதுமக்களையும், வியாபாரிகளையும் வேலைநிறுத்தத்தில் ஒத்துழைக்கும்படி வேண்டிக்கொண்டனர். நகரின் எல்லாக்கடைகளும் மூடப்பட்டன. ஊர்வலம் முடிவுற்றதும் ஒரு இடத்தில் கூடி கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றினர். (ந. கி.)

அய்யம்பாளையம்:

அய்யம்பாளையம், ஜன. 20—

இன்று இந்நகரிலுள்ள கடைகள், பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன. மாலை 6-மணியளவில் திரு அ. சேட் அஜ்மல்கான் தலைமையில் மாணவர்களும், பொதுமக்களும் திரண்டு, 'நேருவின் தீர்ப்பு அநீதி,' 'காமராசரே, இராஜிநாமா செய்,' 'தேவிகுளம், பீர்மேடு தமிழருக்கே'என்று முழங்கிக்கொண்டு முக்கியத் தெருக்களின் வழியாக ஊர்வலம் வந்தனர். (ந. கி.

சோழவந்தான்:

சோழவந்தான், ஜன 19—

இன்று, சோழவந்தான் தி மு கழகச் சார்பில், உயர்நிலைப்பள்ளியிலிருந்து 700 மாணவர்களும், மாணவிகளும் அடங்கிய மாபெரும் கண்டன ஊர்வலம் தோழர் தா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. அன்று பள்ளியும் மூடப்பட்டது. 'தேவிகுளம், பீர்மேடு—தமிழர்களுக்கு வேண்டும்', 'காமராசரே—பதவியை விட்டு விலகு', 'நேரு சர்க்கார்—ஒழிக', 'வடநாட்டு ஏகாதிபத்தியம்—ஒழிக'—என்ற ஒலிகள் வானைப் பிளந்தன. ஊர்வலம் கடைவீதி வரும்பொழுது எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டன. போலீஸ் நிலையம் முன்பு வந்ததும் ஊர்வலம் கலைந்தது. மாலை 7 மணிக்கு, தோழர் தா. ஆவுடையப்பன் தலைமையில் வைகையாற்றுத் திடலில் ஓர் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் மா. வேலன் பேசியதும், தோழியர் சத்தியவாணி-முத்து தமிழ் நாட்டு மந்திரிகள் தங்களுடைய பதவிகளை விட்டு விலக வேண்டுமென்று வற்புறுத்தி சொற்பொழிவாற்றினர் பின்னர் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (ந. கி)

குலசேகரப்பட்டினம்:

19—1—56-ல், நெல்லை மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில், நடுத்தெரு மண்டபத்தில், திருவள்ளுவர் கழகச் சார்பில் சர்வ கட்சிக் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சண்முகம் குலசேகரன் தலைமை தாங்கினர். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

'தேவிகுளம்-பீர்மேடு தமிழருக்கே'

தமிழ் நாடு கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு குழு பின்வரும் அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளது:—

"மாநிலங்களின் எல்லைக் கோடுகளை நிர்ணயிப்பதில் இந்திய சர்க்காரின் அறிக்கை மொழிவழி மாநில அமைப்பை உறுதியாக ஏற்காமல், அதற்கு மாறாகத் தமிழர் பெருவாரியாக இருக்கும் பகுதியான தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களைக் கேரள மாநிலத்திலும் மலையாளிகள் பெருவாரியாக வசிக்கும் பகுதியான கூடலூர் தாலுகாவைத் தமிழ் நாட்டிலும் வலுக்கட்டாயமாக இணைத்திருப்பது கண்டிக்கத்தக்கது. இத்துடன் நிற்காமல், சென்னை மாநிலத்துடன் சேர்க்கப்பட வேண்டுமென்று ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டிருந்த செங்கோட்டைத் தாலுகாவின் மேற்குப் பகுதி எக்காரணமுமின்றி இப்பொழுது கேரள மாநிலத்தில் சேர்க்கப்படுமென்றும் கூறுகிறது.

"'இந்திய ஒற்றுமை' வளர்க்கப்பட வேண்டுமென்று பிரதம மந்திரி வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆனால் இந்திய சர்க்காரின் அறிக்கை, சகோதர மக்களான மலையாளிகளுக்கும், தமிழர்களுக்கும் இடையே எல்லையற்றத் தகராறுகள் நீடிப்பதற்கே உதவும். கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒரு மொழிவழி மாநிலத்துடன் தொடர்ச்சியாக உள்ள அதே மொழி பேசப்படுகிற பிரதேசம் அந்த மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை, எல்லைக் கோடுகளை நிர்ணயிப்பதில் பின்பற்ற வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி வற்புறுத்திவந்திருக்கிறது. ஆனால், இந்த ஜனநாயகக் கொள்கை சர்க்கார் அறிக்கையில் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

"பீர்மேடு-தேவிகுளம் வட்டங்களின் பெரும் பகுதி தமிழ் நாட்டுடன் சேருவதால், கேரளத்தின் பொருளாதாரத் தேவைகளுக்கு (தண்ணீர், மின்சாரம் முதலியன) உதவி செய்வதற்கு சென்னை மாநில சர்க்காரும், கேரள சர்க்காரும் விவாதித்து முடிவு செய்ய வேண்டும்.

"இந்த அடிப்படையில் இந்திய சர்க்காரின் அறிக்கை மாற்றப்பட வேண்டும். இதற்கான ஒன்றுபட்டக் கிளர்ச்சியை ஜனநாயகவாதிகளனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

"இந்திய சர்க்காரின் முடிவுகளை மாற்றுவதற்காகத் திரளும் தமிழ் மக்களின் இந்த இயக்கம், சகோதர மலையாளிகளுக்கெதிராகத் திரும்பாமல் பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பு தமிழ் மக்களையும் இந்த மாநில சர்க்காரையும் சார்ந்ததாகும்."

தென்னாடு தொழில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கார் உத்தியோகம் கிடைக்கிறது சிலர் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்; எனவே, பெரும்பாலானோருக்கு வேலை கிடைக்க வாய்ப்பில்லை; எனவே, இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் கிடைக்கவேண்டும் என்றால், தெற்கில் துரிதமாக தொழில்கள் பெருக வேண்டும்,"—என்று, இந்திய சர்க்கார் ஏற்றுமதி—இறக்குமதி பிரதம கூட்டு 'கண்ட்ரோலர்' தனக்கு அளிக்கப்பட்ட விருந்துக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரிசாவில் பலவிடங்களில் துப்பாக்கிப் பிரயோகம்

இருவர் பலியாயினர்

கட்டாக், ஜன. 22—

கட்டாக், பூரி நகரங்களில் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததின் விளைவாக ஆர்ப்பாட்டக்காரர்களில் இருவர் இறந்துபட்டதாகத் தெரியவருகிறது.

பூரி இரயில் நிலையத்தில் இரயில் பாதைகளில் படுத்துக்கொண்டு இரயில் போக்குவரத்தை நிலைநிற்கச்செய்த கூட்டத்தினர் மீது போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்திருக்கின்றனர்.

இரண்டாம் நாளாக ஒரிசா வானொலி நிலையத்தை மூடிவிடக் கோரிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதும் போலீசார் துப்பாக்கியை நீட்டியிருக்கின்றனர்.

ஒரிசா மாநிலத்தின் எல்லைக் கோரிக்கையை நிராகரித்துத்தீர்ப்பு வழங்கிய இந்திய சர்க்காரின் அநீதியை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இவர்கள், இரயில் நிலையம், வானொலி நிலையம் முதலிய மத்திய சர்க்கார் அலுவலகங்களில் மறியல் செய்வதில் குறியாக இருக்கின்றனராம்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட ஐந்து மாணவர்களை இன்று சுமார் 5,000 ஆர்ப்பாட்டக்காரர்கள், ஏராளமான மாணவர்கள் ஒன்றுசேர்ந்து போலீஸ் நிலையம் சென்று விடுவித்துக்கொண்டு திரும்பிவிட்டனர் என்று தெரிய வருகிறது.

சாம்பல்பூரில் போலீசார், மறியல் செய்வோரில் 25 பேர்களைக் கைதுசெய்த பின்னர்தான், சர்க்கார் பஸ் போக்குவரத்து இலாகா வேலை செய்ய முடிந்தது.

இங்கும் இரயில் போக்குவரத்தை நிலைநிறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது போலீசார்குண்டு மாரி பொழிந்தனராம்.

சங்கர்ராவ் தேவ் மீது குஜராத்தியர் பாய்ச்சல்

பம்பாய், ஜன. 21—

பம்பாயில் கடந்த நான்கு நாள் சம்பவங்களுக்கு இலக்காகியிருந்த பகுதிகளுக்கு சங்கர்ராவ் தேவ் சென்று, மக்களை அமைதியாக இருக்குமாறு பேசிக்கொண்டு வருகையில், கட்கோபர் என்ற இடத்தில் குஜராத்திகள் பலர், தேவைச் சூழ்ந்துகொண்டு அவரை ஏசிப் பேசித் தாக்க முற்பட்டனராம்.

சங்கர்ராவ் தேவின் சமாதான முயற்சியைத் தாங்கள் நம்பவில்லை என்றும், அவரும், இதர மராட்டியத் தலைவர்களுமே பம்பாய் நகரில் கடந்த நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குக் காரணமானவர்கள் என்றும் அந்த குஜராத்திகள் கூறினராம்.

போலீசார், அவர்களுக்குத் தடியடி தந்து, கலைத்து, தேவை மீட்டு இல்லம் சேர்த்தனராம்.

பம்பாயில் மேலும் துப்பாக்கிப்பிரயோகங்கள்

அமைதி ஏற்பட்டு வருவதாகத் தகவல்

பம்பாய் நகரம் கடந்த சனியன்றிலிருந்து அமைதி பெறும் நிலையை அடைந்துவருவதாகக் கூறப்பட்டாலும், பல இடங்களிலும் போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம், தடியடி முதலிய சம்பவங்கள் நிகழ்ந்தவண்ணமே உள்ளன.

சனிக்கிழமையன்றுகூடப் போலீசார் 30 முறைகள்வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்து மேலும் 7 பேர்களின் உயிர்களைக் குடித்திருக்கின்றனர்; எண்ணற்றோருக்குக் காயம்பட்டிருக்கிறது

சுமார் 35 ஆலைகளில், மீண்டும் வேலை துவங்கியிருக்கிறது; 5 ஆலை முதலாளிகள், தொழிலாளர்கள வேலைக்குத் திரும்பத் தயாராக இருந்தும், ஆலைகளைத் திறக்க மறுத்துவிட்டிருக்கின்றனர்

பல இடதுசாரிக் கட்சியினரும் மக்களை அமைதியாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்திருப்பதுடன் ஆர்ப்பாட்டங்கள் மிகுந்திருந்த பகுதிகளுக்குச் சென்று அமைதியை நிலைநாட்ட முயற்சிகளை மேற்கொண்டனர் என்று தெரிய வருகிறது.

இரயில் போக்குவரத்து மீண்டும் ஏற்பட்டுவருகிறது என்றும், ஆனால் வண்டிகள் எல்லாம் தாமதமாகவே வந்துகொண்டிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

நகரின் பல பகுதிகளிலும் இன்னும் தடையுத்தரவு, ஊரடங்குச் சட்டம் இவை அமுலில் இருந்து வருகின்றன என்றும், பூரண அமைதி ஏற்பட்டாலன்றி இவை தளர்த்தப்படுவதற்கில்லை என்றும் சர்க்கார் தெரிவித்திருக்கின்றனர்

இதற்கிடையில், மராட்டியப் பிரதேசக் காங்கிரசைச் சேர்ந்த எல்லா மந்திரிகளும் தங்கள் பதவிகளையும், பொறுப்புகளையும் விட்டு விலகிக்கொள்வதற்கான விலகல் கடிதங்கள் மொத்தமாகக் காங்கிரஸ் மேலிடத்தவருக்கு அனுப்பப்படுகின்றன. மராட்டிய சட்டசபை உறுப்பினர்கள் எல்லாரும் வரும் 28-ந் தேதியன்று தங்கள் பதவி விலகல் கடிதங்களை மராட்டியக் காங்கிரஸ் கட்சியிடத்தில் தாக்கல் செய்வர் என்றும் தெரிய வருகிறது.

டிராம், பஸ் போக்குவரத்து, ஞாயிறன்று சிறிது சிறிதாக மீண்டும் உபயோகத்திற்கு வந்தது என்றும் தெரிகிறது

ஞாயிறன்று நிலைமைகள், நகரில் அமைதி ஏற்படுவதற்குச் சாதகமானவையாகவே இருந்துவந்ததாயும், இரண்டொரு இடங்களிலிருந்து மட்டுமே ஆர்ப்பாட்டச் சம்பவங்கள் நடைபெற்றதாயும் கூறப்படுகிறது.

பம்பாய் மாநில மந்திரிசபையில் உள்ள மராட்டிய மந்திரிகள் பதவிகளிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்திருப்பதால் மந்திரிசபையில் நெருக்கடி தோன்றியிருப்பதாயும் தெரியவருகிறது.

சென்னை 46-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

25—1—56 இரவு 8 மணிக்கு, சென்னை 46-வது வட்ட தி மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் பற்றி முடிவு செய்யப்படும்.

அன்பழைப்பு

அன்புடையீர்,

சென்னை ராஜா அண்ணாமலைபுரம் 2-வது மெயின் ரோடு, 61-வது இல்லத்தில், 25—1—56 அன்று மாலை 4 மணிக்கு, எனது புதல்விகள் மணிமேகலை — அழகுராணி இருவருக்கும், அண்ணா அவர்களால் எழுத்தறிவித்தல் நடைபெறும். இதையே அழைப்பாக ஏற்று விழாவில் கலந்துகொண்டு வாழ்த்தி அருள வேண்டுகிறேன்.

எஸ். எஸ். பி. லிங்கம்
(வேதாசலம்)

ஐதராபாத்தில் தடையுத்தரவு

ஐதராபாத, ஜன 22—

ஐதராபாத் செகந்தராபாத் நகரங்களில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதன்படி கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் எதுவும் நடத்தக்கூடாதென தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

'தெலிங்கானா', 'விசால ஆந்திரா' ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று மோதிக் கொண்டபோது போலீசார் பலாத்காரம் உபயோகித்து மோதுதலைத் தவிர்க்க வேண்டி வந்தது என்றும், இதனை ஒட்டி ஆறு பேர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர் என்றும், இதன் விளைவாகவே மேலும் மோதுதல்கள் ஏற்படாமலிருக்கச் செய்வதற்காக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

'சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட சர்க்கார் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவர்' என்று முதன் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.